தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: **RDD/PR-COVID19/2020/01(A-01)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2020.04.13

சேரல்: சௌபாக்யா (சுபீட்ச) கடன் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி

**"சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி" இன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்**

இது, 2020.04.01இல் விடுக்கப்பட்ட சௌபாக்யா (சுபீட்ச) கடன் திட்டத்தின் கீழ் ("சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி") கொவிட்-19 தொற்றினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய நடுத்தர துறை தொழில்முயற்சிகளுக்காக புதிய மீள்நிதியிடல் வசதிகளை அறிமுகப்படுத்துவதற்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான பின்னிணைப்பு தொடர்பானதாகும்.

பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் பரந்தளவு துறைக்கு சென்றடைவதனையும் உதவுவதனையும் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கி பின்வருவனவற்றை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

(அ) "சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி" இன் உயர்ந்தபட்ச கடன் எல்லையை தற்போதுள்ள வரையறையான ரூ.25 மில்லியனுக்குப் பதிலாக இரண்டு மாத தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டிற்கு மாற்றவும்; அத்துடன்

(ஆ) நாணயச் சபை சுற்றறிக்கை இல. 05/2020இன் பிரிவு 2(i)இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட ஏதேனும் தொழில்முயற்சிகளுக்கு இவ்வசதியின் கீழ் அளவினைக் கருத்திற் கொள்ளாது வசதியளிப்பதற்கும்.

இதற்கமைய, "சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி" இன் கீழ் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட 2020.04.01ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/பிஆர்-கொவிட்19/2020/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் (இதனகத்துப் பின்னர் "பிரதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்" எனக் குறிப்பிடப்படும்) பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

1. பிரதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் தலைப்பு நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் தலைப்பு புகுத்தப்படுகிறது.

   "சௌபாக்யா (சுபீட்ச) கடன் திட்டத்தின் கீழ்: ("சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி") கொவிட்-19 தொற்றினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு புதிய மீள்நிதியிடல் வசதியை அறிமுகப்படுத்துவதற்கான பின்னிணைப்பு"

2. பிரதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் முதலாவது பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தி உள்ளீடு செய்யப்படுகிறது:-

   "சௌபாக்யா கடன் திட்டத்தின் கீழ் கொவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு கடன் வழங்குவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை இயலுமைப்படுத்துவதற்காக, சௌபாக்யா கடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட (திருத்தப்பட்டவாறான) (பின்னிணைப்பு) 2010.03.22ஆம் திகதியிடப்பட்ட இல.ஆர்டிடி/பிஆர்/2010/03 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கான இப்பின்னிணைப்பு விடுக்கப்படுகிறது"

3. பிரதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கிளைவாசகம் 1.1, 1.2, 7.1 மற்றும் 9.1இல் குறிப்பிடப்பட்டுள்ள "நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள்" என்ற சொற்கள் நீக்கப்பட்டு "வியாபாரங்கள்" என்ற சொற்பதம் பதிலீடு செய்யப்படுகிறது.

4. பிரதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கிளைவாசகம் 8.1 நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வாசகம் புகுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| 8.1 உயர்ந்தபட்ச கடன் வரையறை | வியாபாரமொன்றிற்கு இரண்டு மாத தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள் |

இத்திருத்தங்கள் 2020.04.13 இலிருந்து தொழிற்பாட்டிற்கு வருவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் பிரதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான இத்திருத்தங்களின் உள்ளடக்கத்தினை தயவுசெய்து தங்கள் வங்கியின் தொடர்பான திணைக்களம்/ கிளைகளின் அலுவலர்களது கவனத்திற்குக் கொண்டு வரவும்.

உங்கள் உண்மையுள்ள

**எம்.எஸ்.கே தர்மவர்தன**
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**